திரு. எஸ். பலராமன் : தலைவரவர்களே, எகனமிக்ஸ் படித்த பட்டதாரி ஆசிரியர்களிடையே வேலையில்லை என்ற நிலைமை பரவலாக இருப்பது உண்மையா? இது போன்ற ஆசிரியர்களின் மனுக்களை வேலை தேடித்தரும் அலுவலகத்தில் பரிசீலிப்பதில்லை என்ற குறை மாநில அளவில் இருப்பது அரசுக்குத் தெரியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த எகனமிக்ஸ் படித்த ஆசிரியர்களுக்கு உயர் நிலைப் பள்ளிகளில் எகனமிக்ஸ் ஒரு பாடமாக இருந்ததில்லை. அவர்கள் துணைப் பாடமாக எடுத்தது வரலாறு அல்லது வேறு பாடமாகத்தான் இருக்க வேண்டும். எகனமிக்ஸ் படித்தவர்களை பி.டி. ஆசிரியர்களாக ஆக்கிவிட்டு பிறகு அவர்களுக்கு வேலையில்லையென்று சொல்ல வேண்டாம். யார் யார் எகனமிக்ஸ் படித்து பி.டி. ஆசிரியர்களாக பாஸ் பண்ணியிருக்கிறார்களோ அவர்களுக்கு வேலை கொடுத்து ஏதாவது பாடத்திற்கு, வரலாறு போன்றவைக்கு உபயோகப்படுத்தலாம். இனிமேல் பி.டி. யில் சேர்க்கும்போது, எகனமிக்ஸ் படித்தவர்களைச் சேர்க்காமலிருப்பது நல்லது என்று நினைக்கிறேன். ஏற்கெனவே இப்படிப் படித்தவர்களுக்கு கூடுமான வரையில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரலாம் என்ற முறையில் தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

Sree Meenakshi Government College for Women, Madurai.

* 5 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the subjects for the new Degree Courses in the Sree Meenakshi Government College for Women, Madurai started in July 1972;

(b) whether the existing buildings have been found to be quite inadequate after the starting of the new courses;

(c) whether new and additional buildings are under construction; and

(d) whether compound walls are being erected enclosing the portion till recently used as the Municipal Office?

ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி, மதுரை

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 ஜூலையில் தொடங்கப்பட்ட மதுரை, ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரியில் புதிய பட்ட வகுப்புகளுக்கான பாடங்கள் யாவை?

(இ) புதிய பாட வகுப்புகள் தொடங்கியதன் பிறகு, இப்போதுள்ள கட்டிடங்களே போதுமானதாகக் காணப்படுகின்றனவா ?

(உ) புதிய, கூடுதலான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றனவா ?

(எ) நகராட்சி அலுவலகமாக அண்மைக் காலம் வரை பயன்படுத்தப் பட்டு வந்த பகுதியை உள்ளடக்கிச் சுற்றுச் சுவர்கள் கட்டப்பட்டு வருகின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒன்றுமில்லே.

(இ) இல்லே.

(உ) ஆம்.

(எ) சுற்றடைப்புச் சுவர் தற்பொழுது கட்டப்படுவதில்லே. இதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

Women's College at Tiruchendur

*6 *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a Women's College at Tiruchendur during 1973; and

(*b*) if so, the details thereof ?

திருச்செந்தூரில் மகளிர் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எஸ். வெள்ள பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்செந்தூரில், 1973 ஆம் ஆண்டில், மகளிர் கல்லூரி ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) நிர்வாக அலுவலர், ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர், திருச்செந்தூரில் பெண்களுக்கு என ஒரு அரசு கலேக் கல்லூரி ஒன்றைத் தொடங்கும் திட்டம் ஒன்றை அரசுக்கு அனுப்பியிருந்தார். இந்த ஆண்டு அதற்கு ஒப்புதல் அளிக்க இயலவில்லே.